இணையம் மூலம் தமிழில் 'ஹேக்கத்தான்'

25 ந்தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்

கோவை, பிப். 11– மார்ச் 5,6,7 ந்தேதிகளில், 15 வயதுக்கு மேற்பட்டோர் பங்கேற்கும் தமிழ் 'ஹேக்கத்தான்' போட்டி எனப்படும் கணினித் தமிழ் நிரலாக்கப் போட்டி, பள்ளாட்டு அளவிலான பங்கேற்பாளர்களுடன் நடைபெற உள்ளது.

இந்திய அரசிலும் தமிழக அளவிலும் அவ்வப்போது ஹேக்கத்தான் எனப்படும் கணினி நிரலாக்கப் போட்டிகள் நடப்பதைக் கேள்விப் பட்டிருப்போம். அதில் அரிதாகவே தமிழக கணினி தொடர்பான போட்டிகள் நடைபெறும். அப்படிப்பட்ட ஒரு போட்டியை, கோவை அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி, உலகத் தமிழத் தகவல் தொழில்நுட்ப மன்றத்துடன் (உத்தமம்) இணைந்து மார்ச் 5,6,7 ஆகிய நாட்களில் இணையம் வழியாக பள்ளாட்டளவில் நடத்துகிறது. உரிய தலைப்புகளில் மாணவர்கள் தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

ரூ.30 ஆயிரம் பரிசு

போட்டிக்குப் பல சிக்கல் கூறுகள் (problem statements) பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றிற்கு மாணவர்களால் முடிந்த செயலியையோ, மென்பொருளையோ அல்லது செயல்படக்கூடிய முன்வடிவையோ (prototype) உருவாக்கலாம். வெற்றி பெறுபவர்களுக்கு மொத்தப் பரிசாக 30,000 ரூபாயும், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழும் வழங்குகிறார்கள். மாணவர்களின் படைப்பாற்றல் போட்டிக்கு மட்டுமல்லாமல் தமிழ்கூறும் நல்லுலகிற்கும் பயன்படும் வகையில் சவால்கள் உள்ளன.

இன்று நாம் பயன்படுத்தும் இணையம் முதல் விசைப்பலகை வரை அனைத்தும் யாரோ ஒருவரின் கற்பனை தான் செயல்வடிவம் பெற்று, பொருள் வடிவம் அடைந்துள்ளன. அதனால் தான் முழுமையான கல்வியென்பது பத்தகத்திற்கு வெளியே உள்ளது என்கிறோம். அந்த வகையில் மாணவர்களின் கற்பனைத் திறனை மேம்படுத்தவும் புத்தாக்கங்களை அதிகரிக்கவும் அறிவியல் சார்ந்து அல்லது நிரலாக்கம் சார்ந்து போட்டிகள் நடப்புதுண்டு. அதாவது சில சிக்கல்களை முன் வைத்து அதற்குத் தொழில்நுட்பத் தீர்வை உருவாக்கும் போட்டியாக இருக்கும்.

கூடுதலாகத் துறை வல்லுநர்கள் உதவியாக வழிகாட்டலும் செய்வதால் மாணவர்களால் சிறப்பான புத்தாக்கத்தைப் படைக்கவும் முடியும். பணி அனுபவமில்லாத கல்லூரி மாணவர்களுக்கு இவ்வகை செயல்பாடுகள் ஓர் அறிமுக அட்டை போலவும் திறனை மதிப்பிடும் கருவி போலவும்மிருந்து வேலைவாய்ப்பிற்கு உதவும்.

இணையத்தில் இவையெல்லாம் தமிழிலில் இல்லையே, தமிழுக்கு இல்லையே என எத்னையோ தொழில்நுட்ப வளர்ச்சியைப் பார்த்திருப்போம். அத்கையவற்றை நம் தமிழில் கொண்டு வர, நம் மாணவர்களை ஊக்கப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

25 ந்தேதிக்குள் முன்பதிவு

தற்காப்புக் கலைகள், ஓவியம், சமையல், இசை போன்று அனைத்துத் தமிழுக் கலைகளை நவீனப்படுத்தவும், கணினிக்குக் கொண்டுவரவும் சுவையான தலைப்புகள் உள்ளன. அது முதல் தமிழ் இலக்கணம் முதல் இலக்கியம் வரை, மொழிக் கருவிகள் உருவாக்கக்கூடிய சவால்களும் உள்ளன. இவ்விரண்டு மட்டுமல்லாமல் கட்டற்ற கலைக் களஞ்சியமான விக்கிப்பீடியாவும் அது சார்ந்த திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழுக்கான தீர்வையும் கொண்டுவரலாம். போட்டி மட்டுமல்லாமல் வல்லுநர்களின் பயிற்சியும் வழிகாட்டல்களும் உள்ளதால் மாணவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

15 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் இரண்டு முதல் நான்கு நபர் கொண்ட அணியாகக் கலந்து கொள்ள வேண்டும். முன்பதிவிற்குக் கடைசி நாள் பிப்ரவரி 25 ஆகும். எந்தத் துறை மாணவராக இருந்தால், எந்தக் கல்லூரியாக இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் இதில் கலந்து கொள்ளலாம் என்பது கூடுதல் சிறப்பு.

சர்வதேச அளவில் தமிழ் தொழில்நுட்பப் போட்டிகள் நடைபெறுவது தமிழின் பெருமையை மட்டும் கூட்டிக் காட்டலிலிலை இளம் தலைமுறையினருக்குள்ள கடமையையும் சுட்டிக்காட்டுகிறது.

தெலுங்கானா கவர்னர் தமிழிசை சௌந்தரராஜன், கவர்னராகப் பதவியேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி எழுதிய "Moving forward with memories of malden year", என்ற நூலின் பிரதியை மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குநர் ரவி தமிழ்வாணன் பெற்றுக் கொண்டார். கவர்னர் தமிழிசை சௌந்தரராஜன் கணவர் டாக்டர் சௌந்தரராஜன் உடன் உள்ளார்.

திருப்பதி 'ரத சப்தமி': டிக்கெட் முன்பதிவு இன்று தொடக்கம்

திருப்பதி, பிப். 11– திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 19ஆம் தேதி நடைபெறும் 'ரத சப்தமி' விழாவுக்கான சுவாமி தரிசனம் செய்வதற்கான டிக்கெட் முன்பதிவு இன்று முதல் தொடக்கம் என தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில், 19ஆம் தேதி நடைபெறும் உள்ள தை அமாவாசைக்கு பிறகான 7 வது நாளன் கொண்டாடும் 'ரத சப்தமி'யையொட்டி காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை சூரிய பிரபை, சந்திரப் பிரபை, கற்பக விருட்சம் என ஏழு வாகனங்களில் மலையப்ப சுவாமி ஸ்ரீதேவி பூதேவி தாயாருடன் எழுந்தருளி 4 மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.

25 ஆயிரம் டிக்கெட்கள்

ஒரே நாளில் ஏழு வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெற உள்ளதால் இதனை சிறிய பெருவிழா என்றும் அழைக்கப்படுவது வழக்கம். இந்த விழாவை காணவும் ஏழுமலையானை தரிசனம் செய்வதற்காகவுமான டிக்கெட் முன்பதிவு, இன்று காலை 9 மணி முதல் பக்தர்கள் தேவஸ்தான இணையதள முகவரி https://tirupatibalaji.ap.gov.in முன்பதிவு செய்து கொள்ளலாம். இதற்காக 25 ஆயிரம் டிக்கெட்கள் வெளியிடப்பட உள்ளது எனவும் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

மேலும் பிப்ரவரி மாதத்திற்கான மீதமுள்ள நாட்களில், ஒவ்வொரு நாளுக்கும் 5 ஆயிரம் டிக்கெட்டுக்கள் என கூடுதலாக டிக்கெட் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரத சப்தமி நாளில் டிக்கெட் உள்ள பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் நகராட்சி

நக.எண்.43/2021/அ3 நிர்ணயஞ் ஒப்புக்கப்பள்ளி அறிவிப்பு (இரு உறை முறை) நாள் 08.02.2021

இராமேஸ்வரம் நகரா சபை 15வது மத்திய நிதிக்குழு பரிந்துரையின் பேரில் வெளி மாசி திட்டம் 2021 ல் கீழ் 1 புது Commercial Vehicle (LCV) பணைக் வாகனம் கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது இந்திப் பத்தின் கீழ் 1 புது Commercial Vehicle (LCV) விலிகைக் கொடுத்த இரண்டாவது நகரா சி பூமாரவாகர் மூலம் தகுதி வாய்ந்த நுண்ணிய நிறுவனங்களிடமிருந்து கோட்டேஷன் கோரப்பட்டு இரண்டாவது அல்லது விலைப் பொருத்தமானவரிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு மூலமாகவோ இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் 26.02.2021-ம் தேதி மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகிறது.

வ.எண்	பணியின் பெயர் (ஒதுக்கீடு எண்ணிக்கை)	மதிப்பீட்டு மொத்த கிடைக்கும் விலை	ஒப்புக்கப்பள்ளி காப்பீடுக் விலை	முன் வைத்தால் வைப்பு	மனி செலுத்தும் வேண்டிய காலம்
1	Supply and delivery of 9 Nos, of 2 cubic metre capacity municipality 4Wheeler Tipping Type Light Commercial Vehicle (LCV) (BS 6) for Solid waste Management	64.35	11.02.2021 அன்று 5.00 மணி முதல் 25.02.2021 இடைவரை 3.00 மணி வரை	26.02.2021 அன்று 11.00 மணி	17.02.2021 அன்று 2.00 மணி

ஒப்பந்தப்புள்ளியிடுவதற்கு பணைவை வழங்கப்பட்டுள்ளவைகளை தகுதியிருக்கவேண்டிய வருவாய் மாவட்டத்தில் பதிவுச்சான்று பெற்றிருக்கவேண்டும் மேலும் கொள்ளவேண்டிய ஒப்பந்தப்புள்ளிகளுடன் முன் வைப்புத்தொகை மனி அனுப்பி வைக்க வேண்டும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி தேவைகளுக்கு வலைதளம் www.tntenders.gov.in மூலமாக ஒப்பந்தப்புள்ளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி தேவைகளுக்கு www.tntenders.gov.in மூலமாக ஒப்பந்தப்புள்ளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விலைப்பட்டியல் கிடைக்கப்பெறுவதற்கு மாவட்டம் மாவட்டமாக வேறுபடுவதால்